## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில்

# தாம்பரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்; 10 ஆயிரம் கழகத்தினர் கண்டன முழக்கம்!

### சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா - இ.கருணாநிதி - வரலட்சுமி மதுசூதனன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 29-

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து தாம்பரத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் திரண்டு நின்று கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2024 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாற்றான் தாய் போக்குடன், தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக்கண்டித்து நேற்று காலை 10.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., அனைவரையும் வரவேற்றார்.

கழக தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய்ஜெயகாந்த் பாரதி, தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்.இதயவர்மன், டாக்டர் ஆர்.டி.அரசு,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, டி.காமராஜ், எஸ்.இந்திரன், பி.குணாளன், பெருங்களத்தூர் சேகர், த.ஜெயக்குமார், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.நரேந்திரன், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், மூவரசம்பட்டு சதீஷ், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், எம்.செல்வகுமார், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, சே.அருள்தேவி, தாம்பரம் மாநகர நிர்வாகிகள் இரா.நரேஷ்கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன், பேரூர் செயலாளர்கள் மு.தேவ ராஜ், ஆர்.சதீஷ்குமார், ஜி.டி.யுவராஜ்,

ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் சரஸ்வதி மனோகரன், உதயா கருணாகரன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், பேரூராட்சி தலைவர் சாந்தி சதிஷ்குமார், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் காயத்ரி அன்புச்செழியன், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர்கள் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், சத்தியா சேகர், பி.பிரசாத், எஸ்.ஏ.பச்சையப்பன், மாலதி போஸ்கோ, நகர மன்ற துணை தலைவர்கள் தே.திருநாவுக்கரசு, ஜி.கே.லோகநாதன், சித்ரா கமலக்கண்ணன், வீ.அருள்மணி, ஆர்.பரசுராமன், இந்திராணி சுப்பிரமணி யன்,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ப.இராமமூர்த்தி, டி.கே. கமலகண்ணன், கே. மணிகண்டன், கோ. ஜானகி ராமன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா. ஞானபிரகாசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர். ஆர். ஜெயராம்மார்த்தாண்டம், ச.பிரபு, ஜெ.இன்சமாம், வீ.கார்த்திக், ச.ராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் - கழக தோழர்கள் கலந்துக்கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு ஆகியோர் நன்றி கூறினார்கள்.

தாம்பரத்தில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் திரண்டு வந்து தமது கரங்களில் கழக கொடி கண்டன பதாகைகளை ஏந்தி நின்று கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

தாம்பரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் திரண்டு வந்ததன் காரணமாக தாம்பரம் மாநகரமே திக்கு முக்காடியது. தாம்பரம் மாநகரில் காணும் இடமெங்கும் கழகத் தொண்டர்கள் கழக கொடி ஏந்தி நின்றது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.



திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து 5 புதிய பேருந்துகளை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்து விழா பேருரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், மற்றும் என்.கே.ஆர்.சூரியகுமார், எஸ்.ராஜேந்திரன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் சகோதரி

# திருமதி யமுனா மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல்!

சென்னை, ஜூலை 29 -

கழக விவசாய அணிச் செயலாளரும், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதியுமான ஏ.கே.எஸ். விஜயனின் சகோதரியும் தஞ்சை ஈஸ்வரி நகரைச் சேர்ந்த மருத்துவர் சம்பத்குமார் மனைவியுமான திருமதி யமுனா அவர்கள் (வயது 67) 26.07.2024 அன்று காலை உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த யமுனா - டாக்டர் சம்பத்குமார் இணையருக்கு டாக்டர் அருண், டாக்டர் அசோக் ஆகிய இரு மகன்கள் உள்ளனர்.

தஞ்சை ஈஸ்வரி நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட உடலுக்கு கழகத்தினர் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் (27ஆம் தேதி) அன்று காலை 10 .00மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்படும் .

இம் மறைவுச் செய்தியறிந்து - அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில்,

**“புதுடெல்லியில் தமிழ் நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக உள்ள ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் சகோதரி திருமதி யமுனா அவர்கள் இயற்கை எய்திய தகவல் அறிந்து உடனடியாக, திரு. ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்ட தோடு, அவருக்கு ஆறுதலையும் தெரிவித்தேன்”**

- என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்

# வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 24 ஜூலை 2024 அன்று மக்களவையில், மீண்டும் பயன்படத் தக்க வகையிலான புஷ்பக் விமான ரக ராக்கெட்டுகளை தயாரிப்பதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சி முன்னேற்றம் கண்டுள்ளதா? என்றும், விண்வெளி ஆராய்ச்சியை நீண்ட கால வளர்ச்சிக்கு பயன்படத் தக்க வகையில் முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என்று ஒன்றிய அரசின் பணியாளர் நலத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் மத்திய பணியாளர் நலத்துறை இணைஅமைச்சர்அளித்த பதில் வருமாறு:-



மீண்டும் பயன்படத் தக்க வகையிலான புஷ்பக் விமான ரக ராக்கெட்டுகளை வடிவமைப்பதன் மூலம், குறைந்த செலவிலும், நீடித்த வளர்ச்சியை உறுதிபடுத்துவதிலும், இந்திய விண்வெளி ஆராய்சி நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும், இதற்கான சோதனைமுயற்சிகள் இதுவரை மூன்று முறை நிகழ்த்தப்பட்டுள்ளதாகவும், செங்குத்தாக பயனிக்கும் வகையிலும், திரும்பவும் பூமிக்கு வந்து சேரும் வகையிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், எரிபொருளுக்கு தேவையான பிராண வாயுவை வளிமண்டலத்திருந்து எடுத்துக் கொள்ளும் அளவிற்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்தொடர் முயற்சிகளால் விண்வெளி செலவினை குறைத்திடவும், நீண்ட கால வளர்ச்சிகான உறுதியும் வெகு விரைவில் கிட்டும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் மக்களவையில், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

## தென்மேற்கு பருவமழையால் நீர்வரத்து 14,127 கன அடியாக அதிகரிப்பு:

# முழு கொள்ளளவை எட்டும் பவானிசாகர் அணை!

சத்தியமங்கலம்,ஜூலை 29-

நீர்ப்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 14,127 கன அடியாக அதிகரித்துள்ளதால் முழு கொள்ளளவை எட்ட உள்ளது. தமிழகத்தில் மேட்டூர் அணைக்கு அடுத்தபடியாக 2வது பெரிய அணையாக ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை விளங்குகிறது.

இந்த அணை 105 அடி உயரமும், 32.8 டிஎம்சி கொள்ளளவும் கொண்டதாகும். பவானிசாகர் அணை மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மலைப் பகுதி மற்றும் வடகேரளாவில் தொடர்ச்சியாக தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பவானிசாகர் அணைக்கு வந்து சேரும் பவானி ஆறு மற்றும் மாயாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணைக்கு நேற்று நீர்வரத்து 7,465 கன அடியாக இருந்த நிலையில் இன்று காலை அணைக்கு நீர்வரத்து 14,127 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணை நீர்மட்டம் 87.54 அடியாகவும், நீர் இருப்பு 20 டிஎம்சி ஆகவும் உள்ளது. அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்காலில் 1205 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், விரைவில் அணை முழு கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாட்டில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் எண்ணிக்கை அதிகரிக்க -

# இ.பாஸ்போர்ட் வழங்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

### மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29 -

நாட்டில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் எண்ணிக்கை அதிகரிக்கவும், விண்ணப்பித்தவர்களுக்கு பாஸ்போர்ட் வழங்குவதை துரிதப்படுத்தவும் இ.பாஸ்போர்ட் வழங்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் திமுகவின் வேலூர் மக்களவை தொகுதி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு:-

ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட (கடவுச்சீட்டு) பாஸ்போர்ட்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாவை?

நாட்டில் நிலுவையில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநில வாரியாக நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் மீதான ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் யாவை?

நாட்டில்தற்போது செயல்படும் பாஸ்போர்ட் சேவை மையங்களின் எண்ணிக்கை மாநில வாரியாக; நாட்டில் புதிய பாஸ்போர்ட் சேவை கேந்திரம்/மையங்களை அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால், மாநில வாரியாக அதன் விவரங்கள்?

நாடு முழுவதும் உள்ள கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்காகப் பதிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பாஸ்போர்ட் வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையெனில் அதற்கான காரணங்கள்?

குடிமக்களுக்கு உட்பொதிக்கப்பட்ட சிப்கள், எதிர்கால தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய இபாஸ்போர்ட்டுகளை வெளியிடுவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் தங்கள் கடவுச்சீட்டின் ஸ்கேனிங் சிக்கல்களால் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரச்சினைகளை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்ததா?

அதற்கு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

இந்தியாவில் வழங்கப்பட்ட பாஸ்போர்ட்களின் மொத்த எண்ணிக்கை 1,11, 15,399 (2019), 54,12,614 (2020), 73,63,491(2021), 1,17,41,203 (2022), 1,37,54, 4322 (2022), மற்றும் 66,05, 906 (ஜனவரிஜூன் 2024) தமிழ்நாடு உட்பட நாட்டில் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை இன்றுவரை 86,430 ஆகும். நாடு முழுவதும் உள்ள RPOக்கள், வரைபடங்கள் மற்றும் கிராஸ் கிராண்டிங் அதிகாரிகளின் விவரங்கள் மூலம் சிறப்பு இயக்கங்கள் மூலம் நாடு முழுவதும் அமைப்பை மேம்படுத்த அமைச்சகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும், பணியின் தேவையைப் பொறுத்து, மத்திய பாஸ்போர்ட் அமைப்பின் அதிகாரிகள்/அதிகாரிகள், அந்தந்த பாஸ்போர்ட் அலுவலகங்களில் பணிபுரியும் பலத்தை அதிகரிக்க, பல்



வேறு பாஸ்போர்ட் அலுவலகங்களில் தற்காலிகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

37 பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகங்களின் (ஆர்பிஓக்கள்) கீழ் 93 பாஸ்போர்ட் சேவா கேந்திராக்கள் (பிஎஸ்கே) மற்றும் 440 போஸ்ட் ஆஃபீஸ் பாஸ்போர்ட் சேவா கேந்திராக்கள் (பிஓபிஎஸ்கே) உள்ளிட்ட 533 பாஸ்போர்ட் சேவை மையங்கள் தற்போது நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

தபால் அமைச்சகத் துறையுடன் இணைந்து ஜனவரி 2017 இல் நாட்டின் தலைமை அஞ்சல் அலுவலகங்களில் அஞ்சல் அலுவலகங்களில் ஒவ்வொரு பகுதியிலும் அஞ்சல் அலுவலக பாஸ்போர்ட் சேவா கேந்திரா எனப்படும் சேவா கேந்திராக்களை திறக்க முடிவு செய்தது. இல்லாத மக்களவைத் தொகுதிகளில் புதிய பாஸ்போர்ட் அலுவலகங்கள்/ மையங்கள் திறப்பது விண்ணப்பங்களின் அளவு உட்பட பல காரணிகளைப் பொறுத்தது.

“தட்கால்” திட்டத்தின் கீழ் விரைவாக பாஸ்போர்ட் வழங்குவதற்கான ஏற்பாடு உள்ளது, இதன் மூலம் மாணவர்களுக்கும் விரைவாக பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது. முறையான ஆவணங்களுடன் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் விதிகளின் படி பாஸ்போர்ட் வழங்கப்படும்.

உட்பொதிக்கப்பட்ட சில்லுகளுடன் கூடிய இபாஸ்போர்ட்களை வெளியிடுவதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது, புவனேஸ்வர் மற்றும் நாக்பூரில் உள்ள பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகங்களில் இபாஸ்போர்ட் திட்டத்தின் சோதனை நடந்து வருகிறது. வெற்றிகரமான சோதனை துவக்கம் மற்றும் தேவையான சான்றிதழ்களுக்குப் பிறகு, இது இந்தியா முழுவதும் உள்ள மீதமுள்ள பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகங்களில் படிப்படியாக வெளியிடப்படும். ePassport என்பது ஒரு ஒருங்கிணைந்த காகிதம் மற்றும் மின்னணு பாஸ்போர்ட் ஆகும். இதில் உட்பொதிக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண் அடையாள சிப் மற்றும் ஆண்டெனா உட்பொதிக்கப்பட்டுள்ளது. பாஸ்போர்ட்டின் முக்கியமான தகவல்கள்> அதன் தரவுப் பக்கத்தில் அச்சிடப்பட்டு> சிப்பில் சேமிக்கப்படும்> இதனால் அது மோசடி செய்வதை கடினமாக்குகிறது. ஆவணம் மற்றும் சிப்பின் பண்புகள் சர்வதேச சிவில் ஏவியேஷன் ஆர்கனைசேஷன் ஆவணம் 9303 இன் படி உள்ளன.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பயணிகள் தங்கள் கடவுச்சீட்டின் ஸ்கேனிங் சிக்கல்கள் தொடர்பாக எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினையையும் ஒன்றிய அரசுக்கு தெரியவரவில்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

## சைதை மேற்கு 139 (அ ) வட்ட பகுதி நெசவாளர் அணி துணை அமைப்பாளர்

# வி.ஆதிகேசவன் மருமகன் தேவராஜ் மறைவு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - எம்.கிருஷ்ணமூர்த்தி - சை.மு.சேகர் அஞ்சலி !

சென்னை, ஜூலை 29 -

சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்தைச் சார்ந்த பகுதி நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வி.ஆதிகேசவனின் மருமகன் தேவராஜ் (வயது 59 ) 25.07.2024 மாலை 5.30மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு செய்தியறிந்த மாவட்ட செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மேலும் பகுதி செயலாளர் 10 வது மண்டலக் குழுத்தலைவர். எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்ட செயலாளர்கள். சை.மு.சேகர், கோட்டூர்.சண்முகம் மற்றும் இ.வரதன், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என்.ரமேஷ், எஸ்.கண்ணன், து.மா.பொ.சி, கா.மூர்த்தி, து.வடிவேலன், ப.மோகன், எஸ்.ஏழுமலை உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 26.07.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.மணியளவில் சாரதி நகர் புண்ணியக்கோட்டி தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு சைதை மேற்கு மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம்.வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த LPG டேங்கர் லாரி ஓட்டுநர் முருகன் என்பவர் கடந்த 16.07.2024 அன்று கர்நாடகா மாநிலம், சிரூரு பகுதியில் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்ததையடுத்து, அவரது மனைவி செவ்வந்தியிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு முன்னிலையில் வழங்கி, ஆறுதல் தெரிவித்தார்.இந்நிகழ்வில், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மரு.மாலதி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கதிரவன், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி , பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.